# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/3 - 2021 ඔක්තෝබර් මස 11 වැනි සඳුදා - 2021.10.11

*2249/3 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்**

2 மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைவாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விவரணம் | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| 1 | 10.06 | 1006.30 | பாதியாக அரைக்கப்பட்ட அல்லது முழுமையாக அரைக்கப்பட்ட அரிசி, மெருகூட்டப்பட்டவை அல்லது மெருகூட்டப்படாதவை, பளபளப்பாக்கப் பட்டவை அல்லது பளபளப்பாக்கப்படாதவை | |
| | | 1006.30.10 | பச்சை அரிசி | கிலோ கிராமிற்கு 65.00 ரூபா |
| | | 1006.30.20 | குத்தரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | கிலோ கிராமிற்கு 65.00 ரூபா |
| | | 1006.30.30 | சம்பா அரிசி (சிவப்பு அல்லது வெள்ளை) | கிலோ கிராமிற்கு 65.00 ரூபா |


1A — PG 5424 - 495 (2021/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, வர்த்தக அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், இலங்கை அரச வர்த்தக (பொது) கூட்டுத்தாபனத்தினால், மேலேயுள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள, இறக்குமதி செய்யப்படும் அரிசி மீதான பிரயோகிக்கக்கூடிய விசேட வியாபாரப் பண்ட அறவீடான கிலோகிராமிற்கு ரூபா 65.00 இல் இருந்து கிலோ கிராமிற்கு ரூபா 25 சதம் அறவிடப்பட்ட பின்பு மிகுதிப் பெறுமதி கைவிடப்படல் வேண்டுமென இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

3. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக இக்கட்டளையானது 2021, ஒற்றோபர் மாதம் 12 ஆந் திகதி முதல் ஆரம்பமாகும் 04 மாத காலப்பகுதிக்கு செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

**பசில் ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, ஒற்றோபர் 11.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.